முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1056

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**20.08.2022**, சனிக்கிழமை

1. மாதவராஜனே அரங்கா போற்றி
   மண்ணுலகை மீட்டிடும் தேசிகா போற்றி
   பூதலம் உன் சக்திவழி இயங்கிட
   புண்ணியனே உன்னால் ஞானலோகம் ஆகும் எனக்கூறி
2. கூறியே சுப்ரமண்யர் யானும்
   குறையிலா ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் ஆவணி மாதம் 04 நாள், 20.08.2022 சனிக்கிழமை)
   தெரிவிப்பேன் ஆறுமுக அரங்கனுக்கு
   தேசிகன் சன்மார்க்கம் கொண்டே இந்த பேருலகில்
3. பேருலகில் அற்புதத்தை நடத்த இருக்க
   தொடர்ந்து வந்து தொண்டர் பெருமக்களெல்லாம்
   மக்களெல்லாம் மனம் சலிப்படையாது
   மாதர்மவான் தர்மத்தை கையில் எடுத்துகொண்டு
4. ஆதரவாய் ஜீவகாருண்ய உண்மை நெறியை
   அறிவிப்பேன் மக்கள் ஏற்றுத்தொடர
   தொடரவே இந்த கலியுகத்தில்
   தெரிவிப்பேன் சடுதி பாதுகாப்பான
5. இடரில்லாத மாற்றங்கள் இனிதே கண்டு
   இந்த பேருலகம் ஞான உலகமாகக்கூடும்
   கூடவே தனி நபர் துன்பங்களும்
   குரு அரங்கன் அருளாசி தொடர்வதாலே
6. தடையின்றி அகன்றோடி அவரவர்க்கும்
   தனித்துவம் சர்வ ஞான பலம் கூடி
   இடரில்லா இந்த கலியுக வாழ்வை
   இனிதே பாதுகாப்பாய் அவர்கள் கடக்க நேரும்
7. நேர்மைபட தர்மத்தை செய்துகொண்டு
   நீதிமான் வழிதொடர்ந்தால் நிலவுலகமே
   நீதி ஆட்சிதனை சடுதி காணக்கூடும்
   ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–